1982 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இது வனத்துறையின் மூலம் ஆராய்ந்து அறியப்பட்டு, வேளாண்மைத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டு வேளாண்மைத்துறை இதை கிராமங்களில் விவசாயிகளிடத்திலே பிரச்சாரம் செய்து வருகிறது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த மரத்தை பயிரிடும் திட்டத்தை மிகப் பெரிய அளவில் ஏற்றுக்கொண்டு அங்கே இத்திட்டத்தை விரிவாகச் செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். அதைப்போல தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த மரத்தை பற்றிய அவசியத்தையும், இதனால் விளையும் பயன்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லி மேலும், மேலும் இந்த மரங்களைப் பயிரிடுவதற்கு முக்கியத்துவம் அளித்து வேளாண்மைத் துறையும் வனத்துறையும் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சுபாபுல் என்ற அதிசய மரத்தின் பயன்களைப் பற்றி அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையில் சுவீடிஷ் சர்க்காரால் சுமார் 30 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் வனவளத்தைப் பெருக்க உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் இந்த மரங்களை விரிவான அளவில் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் முன்னாலே என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். அந்த சுவீடன் நாட்டு உதவியோடு ஆண்டுதோறும் 9 கோடி ரூபாய் திட்டத்தில் இப்போது இந்த சமுதாயக் காடுகள் வளர்க்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தில் இந்த மரங்களை வளர்க்கும் திட்டம் பெரிய அளவில் இணைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ''ஜாஹீர்'' காடுகள்

*வினா எண். 306—திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ''ஜாஹீர்'' காடுகளை அரசு எப்போது தன்வசம் எடுத்துக் கொண்டது?

(ஆ) இவ்வனப் பகுதிகளைப் பாதுகாக்க எடுக்கப் பெற்றுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள ஆரிய கவுண்டன் ஜாஹீர், குரும்ப கவுண்டன் ஜாஹீர் மற்றும் ஜடைய கவுண்டன் ஜாஹீர் காடுகளை அரசு 25-8-1976-ல் எடுத்துக் கொண்டது.

(ஆ) இக்காடுகளை நல்ல முறையில் காப்பாற்றவும் மேலும் நிர்வாகத்திற்காகவும் ஒரு உதவி வனப் பாதுகாவலரும் அவருடன் சில வனத்துறை அலுவலர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக மரம், விறகு, சந்தன மரங்கள் இவற்றை எடுத்துச் செல்வதைத் தடுக்க மூன்று சோதனைச் சாவடிகள் கல்ராயன் மலைகளில் வக்கிநாயக்கன்பட்டி வடக்காநத்தல் மற்றும் புதுப்பாலப்பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி எடுக்கப்பட்ட ஜாஹீர் காடுகளின் பரப்பளவு எவ்வளவு? அங்கே சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, 78,000 ஹெக்டேர் நிலப்பரப்பு இந்த ஜாஹீர்களுக்கு சொந்தமாக இருந்ததாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்போது வருவாய்த்துறை செட்டில்மெண்ட் செய்து 45,242.54 ஹெக்டேர் நிலத்தை வனத்துறையின் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான வனச் சட்டம் 14-வது பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்ட காடுகளாக அறிவிப்பு செய்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9·20)

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காடுகளில் எவ்வளவுதான் காவல் இருந்தாலும் சந்தன மரம் போன்ற விலையுயர்ந்த மரங்களை வெட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அதைத் தடுக்கின்ற வகையிலே கடுமையான ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பொதுவாகவே சந்தன மரங்கள் போன்றவற்றை திருடிக் கடத்திக்கொண்டு போவதைத் தடுக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்த கல்ராயன் காட்டுப் பகுதிகளில் இவ்வளவு நாள் காவலற்ற நிலைமை நீடித்து வந்தது. இப்போதுதான் தீவிரமாக கண்காணிப்புக்கு அந்தப் பகுதி உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.